ருவன்வெல்ல பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ருவன்வெல்ல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் ருவன்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகார சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகார சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முத்திரை கட்டண மதிப்பீட்டு வருமானம் மீளாய்வாண்டு வருமானமாக கணக்கிடுவதற்கு பதிலாக அட்டவணைகள் மூலம் உறுதியான சில மாதங்களின் முத்திரை கட்டணத்தை ஆண்டில் வருமானமாக கணக்கீடு செய்துள்ளமையால் முத்திரை கட்டண வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 4,690,578 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டு இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வருமான விடயங்கள் 06 இனது முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதி மீதி ரூபா 10,653,851 ஆன போதும் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் அம் மீதி ரூபா 1,747,441 யினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 திகதி பிரதான பேரேட்டில் ஊழியர் கடன் கணக்கில் வரவு மீதி ரூபா 850,918 இனால் குறைந்தமைக்கு காரணம் தேடி சரிசெய்ய நடவடிக்கை எடுக்காது ‘‘மீதிக்கான சீராக்கம்’’ என தனி குறிப்பிட்டு கணக்குகள் சமப்படுத்தப்பட்டிருந்தன. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு ரூபா 756,395 பெறுமதியான 03 பண்டக மீதிகளின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளிற்கு இடையிலான வித்தியாசத்தை திரண்ட நிதியத்திற்கு சீராக்குவதற்கு பதிலாக மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |
| (உ) | ஏலவிற்பனைக்கு பரிந்துரைக்கப்பட்ட ரூபா 3,032 பெறுமதியான இருப்பு மற்றும் ரூபா 567,989 ஆன நிலையான சொத்துக்கள் ஏலத்தில் விற்க முன்னர் மீளாய்வாண்டில் பொது பண்டக இருப்பிலிருந்து மற்றும் நிலையான சொத்து கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கிற்கும் சீராக்கப்பட்டு இருந்தது. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | ஏலத்தில் விற்கும் வரை சொத்துக்களின் பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றக் கூடாது. |
| (ஊ) | பெற வேண்டிய வேலை மானிய கடன்படுனர் கணக்கில் ரூபா 382,136 ஆன வித்தியாசத்தை திரண்ட நிதியத்திற்கு சீராக்குவதற்கு பதிலாக ஆரம்பத்தில் நிலவிய மொத்த மீதியும் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டு இருந்தது. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 6,102,505 ஆன போதும் ரூபா 5,769,505 என கணக்கீடு செய்ததில் ஆண்டின் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 333,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 252,640 மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 231,663 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கையில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கிய ரூபா 780,000 கடன் முற்பணம் பொது நிர்வாக படியாக கணக்கீடு செய்தமையும் அத் தொகையிலிருந்து மீள் கிடைத்த ரூபா 600,000 ஆன தொகையை சம்பள மீள்நிரப்புகை என கண்கீடு செய்தமையும் காரணமாக மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 180,000 தொகை நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்படாததுடன் செயற்பாட்டு மிகையும் அதற்கு சமமான அளவால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டு கொள்வனவு செய்திருந்த ரூபா 104,800 ஆன தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் நானாவித செலவின் கீழ் கணக்கீடு செய்ததன் காரணமாக தளபாடங்கள் | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை | மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகளை சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பொருத்துக்கள் மேலும் ஆண்டின் செயற்பாட்டு மிகை அதற்கு சமனான அளவால் குறைத்து காட்டப்பட்டுள்ளது. | எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | இனங்கண்டு கணக்கீடுசெய்ய வேண்டும். |
| (ஓ) | கடந்த ஆண்டு திசெம்பர் மாதத்திற்காக கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பு பணம் ரூபா 51,119 இனால் கூடுதலாக குறிப்பிடப்பட்டதனை சரிசெய்ய கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பு கணக்கு செலவு வைக்க வேண்டியதற்கு பதிலாக வரவு வைத்ததால் 2020 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய மீதி ரூபா 102,238 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2019 நவம்பர் கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பாக காட்டிய தொகைகும், திசெம்பர் மாதம் உண்மையாக செலுத்திய தொகைகும் இடையிலான வித்தியாசம் கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பாக கூடுதலாக காட்டிய பணமென அறிவிக்கப்பட்டள்ளது. | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டு காணி மற்றும் கட்டிட அட்டவணையில் காட்டப்பட்ட 60 காணிகளின் பெறுமதியும், சபைக்கு சொந்தமான ருவன்வெல்ல வாராந்த சந்தை மற்றும் ஹலர் இயந்திரத்தின் பெறுமதியும், இயற்கை பசளை கருத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பசளை இருப்பையும் இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கிரயத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டு இறுதியில் நடைமுறையல்லா சொத்துக்ளின் பெறுமதி ரூபா 274,982,336 ஆன போதும் அத்திகதியில் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்தால் பங்களிப்பு கணக்கு மீதி ரூபா 275,674,705 ஆனதில் அவ்விரண்டு கணக்குகளிற்கிடையில் ரூபா 692,369 ஆன வித்தியாசம் நிலவியது. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வித்தியாசத்தை இணக்கம் செய்து கணக்கை சரி செய்ய வேண்டும் |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கணக்கு விடயங்கள் 08 தொடர்பாக நிதிக்கூற்றுகள் பிரகார பெறுமதி ரூபா 345,475,284 மற்றும் அட்டவணை பிரகார பெறுமதி ரூபா 340,900,197 ஆனதில் ரூபா 4,575,087 ஆன வித்தியாசம் நிலவியது. | 2021 ஆண்டு சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும், வருமான விடயங்களின் வித்தியாசமாக குறிப்பிடப்படுவது எதிர்வரும் ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைப்பனவு மற்றும் மீளாய்வாண்டு தொடர்பாக முன்னைய ஆண்டு கிடைப்பனவிற்கிடையிலான வித்தியாசமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகள் அதற்குரிய துணை பதிவேடுகளுடன் இணங்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 40,709,453 ஆன 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இவற்றை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கு மீதிகளை உறுதி செய்து கொள்ள எழுத்து மூல சான்றுகளை சமரப்பிக்க வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154 பிரிவு மற்றும் சபரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் 2005/4 இலக்க சுற்றறிக்கை மற்றும் 2005 ஜுன் 01 திகதி சுற்றறிக்கையின் 3(iv) மற்றும் 3(x) பிரிவுகள் | காணிப் பதிவு அலுவலகத்திலிருந்து விபரங்களை பெற்று பிரித்து விற்கப்பட்ட காணிகளின் விற்பனை பெறுமதியின் ஒரு சதவீத வரிப் பணத்தை சபைக்கு அறவிட வேண்டிய போதும் பிரிக்கப்பட்ட காணிகளிலிருந்து மதிப்பீட்டு பெறுமதியின் மீது மாத்திரம் 2010 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வரி ரூபா 1,121,730 அறவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(3) | 2018 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கிடைத்த மீள் செலுத்தப்படாத ரூபா 637,537 ஆன வைப்புக்கள், குறித்த ஆண்டுகளின் வருமானத்திற்கு எடுக்காது வைப்பாக நிருத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இவற்றை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2002 இன் 14 இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்ட 41 (1) பிரிவு | சபைக்கு 2019 செப்டம்பர் 16 திகதி அறிவிக்கப்பட்டிருந்த புறக்கணிக்கப்பட்ட வரி மற்றும் அதற்குரிய தண்டப்பணத்தின் | தகவல்களை உறுதி செய்து கொள்ள கோவையொன்றை தேடிக்கொள்ள | செலுத்த வேண்டிய சரியான வரித் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூட்டுத் தொகை ரூபா 627,863 ஆன போதும் கணக்கின் பிரகாரம் செலுத்த வேண்டிய வரித் தொகை ரூபா 427,843 ஆக இனங்கண்டிருந்ததுடன் கணக்காய்வு திகதி வரை அதனை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே அக் காலப் பகுதிக்குரிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அறிக்கையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | முடியாதுள்ளதால் வேறு ஆவணங்களை பரிசோதித்து நடவடிக்கை எடுப்பதுடன் 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இவற்றை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொகையை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2009 இன் 09 இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி சட்டத்தின் 06 ஆம் பிரிவு | 2019 செப்டம்பர் 30 திகதி விடுக்கப்பபட்ட அறிவித்தல் பிரகாரம் புறக்கணிக்கப்பட்ட வரி மற்றும் அதற்குரிய தண்டப்பண கூட்டுத் தொகை ரூபா 77,340 ஆனது. எனினும் இறுதிக் கணக்குகள் பிரகாரம் செலுத்த வேண்டிய மற்றும் முற்கொடுப்பனவாக முறையே ரூபா 257,646 மற்றும் ரூபா 218,840 குறிப்பிடப்பட்டிருந்தன. இம் மீதிகளை தீர்க்க கணக்காய்வு திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அக் காலப்பகுதிக்குரிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி அறிக்கையையும் சமர்ப்பிக்கப்படவில்லை. | தகவல்களை உருதி செய்து கொள்ள கோவையொன்றை தேடிக்கொள்ள முடியாதுள்ளதால் வேறு ஆவணங்களை பரிசோதித்து நடவடிக்கை எடுப்பதுடன் 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இவற்றை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய சரியான வரித் தொகையை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 6,709,574 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 7,519,782 ஆகும்

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 3,992,934 அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலும் 85 ஆதனங்களின் நிலுவையை பதிவழிக்க உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளதாகவும் 80 ஆதனங்கள் அகற்றப்பட்ட ஆதனமென பெயரிடப்பட்ட போதும் அவ் ஆதனங்களின் நிலுவையை பதிவழிக்க | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை மீதியை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மகாசபையின் அங்கீகாரத்தை பெற்று தாமதமின்றி முன்நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 91,394 ஆனது. | எதிர் காலத்தில் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) வாடகை

--------------

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் வாராந்த சந்தை, மீன்கடை மற்றும் இறைச்சிக் கடை வாடகை நிலுவை மீதி ரூபா 1,618,903 அறவிடப்படவில்லை. | ஒரு இடத்திற்காக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எஞ்சிய இறைச்சி கடை நிலுவையை அறவிடுவது தொடர்பில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் பொது சந்தை மற்றும் பொது சந்தையல்லாத கடையறை வாடகை நிலுவை மீதி ரூபா 4,461,797 மற்றும் நிலுவை தண்டப்பண மீதி ரூபா 763,801 ஆனது | அறவீடு குறைந்த மட்டத்தில் காணப்படுவதன் முக்கிய காரணம் கொவிட் தொற்று நிலைமை எனவும் தற்போது நிலுவையை அறவிட வருமான பரிசோதக அலுவளர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நிலுவையை செலுத்துமாறு குத்தகைதாரர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2009/01 இலக்க 2009 திசெம்பர் 22 திகதிய சுற்றறிக்கையின் 2 பிரிவு பிரகாரம் குறித்த உள்ளூராட்சி அதிகார எல்லைக்கு வெளியில் கடமை பயணத்திற்காக மாத்திரமே தவிசாளரிற்கு இணைந்த படிகள் வழங்க முடியுமான போதும் அதற்கு முறனாக 2020 ஜனவரி முதல் மார்ச் வரை தினம் ஒன்றிற்கு ரூபா 1,000 வீதம் மாதத்தின் அனைத்து நாட்களும் உள்ளடங்கும் வகையில் ரூபா 87,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஓட்டக் குறிப்பு எழுதும் பிரச்சினை காரணமாக இது ஏற்பட்டுள்ளதாகவும், கணக்காய்வினால் சுட்டிக் காட்டியதன் பின்னர் சாரதிக்கும் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிற்கும் ஆலோசனை வழங்கி இதனை சரிசெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குரிய கெப் வண்டியொன்றின் மைலோ மாணி மற்றும் தின ஓட்டக் குறிப்பில் காட்டப்படும் கிலோ மீட்டர் அளவிற்கு இடையில் 17,554 கிலோ மீட்டர் வித்தயாசம் காணப்பட்ட போதும் ரூபா 260,728 பெறுமதியான 2,507 லீட்டர் எரிபொருள் கூடுதலாக பெறப்பட்டு இருந்தது. | இவ் வித்தியாசம் தொடர்பில் வாகனத்தின் முன்னால் சாரதியிற்கு விளக்கமளிக்குமாறு அறிவித்துள்ள போதும் இது வரை விளக்கமளிக்கவில்லை எனவும் தாமதமின்றி முன்நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | முறைகேடு இடம் பெற்றுள்ளனவா என பரிசோதிக்க வேண்டும். |

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 13 பதவிகளில் 28 வெற்றிடங்கள் காணப்படுவதுடன், 06 பதவிகளில் 24 ஊழியர் மிகையும் காணப்பட்டது. பிரதேச சபை இயக்க செயற்பாடுகளிற்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் செயலாளர் பதவி 2011 மார்ச் 31 இலிருந்தும், 02 நூலக அதிபர் பதவி, திண்ம கழிவுப் பொருள் மத்திய நிலைய பொறுப்பாளர் பதவி மற்றும் வேலை கள மேற்பார்வையாளர் பதவி 2013 ஜனவரி 21 திகதியிலிருந்து, திட்டமிடல் களைஞர் பதவி 2015 செப்டம்பர் 23 இலிருந்தும் வெற்றிடமாக காணப்பட்டன. வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள, மிகை ஊழியர்களை அங்கீகரித்துக் கொள்ள அல்லது ஆளணியை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆளணி பற்றாக்குறை காரணமாக கடமைக்கு தடை ஏற்படுவதால் பதவிகளை உருவாக்க சமர்பிக்கப்பட்டுள்ளதாகவும், அமைய அடிப்படையில் ஆட்சேர்த்த ஆளணியை நிரந்தரமாக்கித் தருமாறு கோரி சபை அங்கீகரித்துள்ளதாகவும் அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்பவும், மிகை ஊழியர்களை அங்கீகரித்துக் கொள்ள அல்லது ஆளணியை திருத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை வருடாந்தம் ஒன்றுசேரும் 365 டொன் அளவான கழிவுப் பொருட்களிலிருந்து சேதனப் பசளை உற்பத்தி செய்திருந்த போதும் கழிவுப் பொருள் தொட்டியினுள் உற்பத்தி செய்து எஞ்சுகின்ற உக்கலடையாத பொருட்களை வெளியிட இடமொன்று இல்லாததால் ரூபா 300,000 ஆன வருடாந்த வாடகையிற்கு பெற்றுக் கொண்ட தனியார் இடமொன்றிற்கு வெளியிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | சுகாதார ரீதியான நில நிரப்புதலிற்காக காணியொன்றை சுவீகரித்துள்ளதாகவும், அது தொடர்பான முன் நடவடிக்கைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது. | எஞ்சுகின்ற உக்கலடையா பொருட்களை வெளியிடுவதற்கு இடமொன்றை பெற்றக் கொள்ள வேண்டும். |